**சீதாவகபுர நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 27 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டினது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர சீதாவகபுர நகர சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன

(அ) பின்வரும் பெறுமதிகள் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.
- (i) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சேமிப்பு மீதியான ரூபா 135,684
- (ii) Bail இயந்திரத்தின் பெறுமதியான ரூபா. 770,000

(ஆ) முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களும் இயந்திர சாதனங்களும், தளபாடங்களும் பொருத்திகளும் என்பதன் கீழ் கணக்கிலிடப்பட்டமையால் ஏற்பட்ட தவறை நிவர்த்தி செய்யாமையால் தளபாடங்களும் பொருத்திகளும் கணக்கானது ரூபா 232,866 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்குகளின் பிரகாரம் 05 கணக்கீட்டு விடயங்களது மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 80,894,479 ஆகும். அவற்றுடனொத்த உப பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் அக் கணக்கு மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 58,411,400 ஆகும்.

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையால் ரூபா 19,607,301 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.4 தீர்த்து வைக்கப்படாத கணக்குகள்

(அ) பெற வேண்டிய கணக்கு மீதிகளான ரூபா 3,358,259 நெடுங்காலமாக தீர்த்து வைக்கப்படாது நிதிக் கூற்றுக்களில் தொடர்ந்து முன்கொண்டுவரப்பட்டவாறிருந்தது.

(ஆ) அரச நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 12,928,750 மீதியை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 23,830,079 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 7,647,822 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 வருவாய்ச் சேகரிப்பிலான செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமெனச் செயலாளரால் சமர்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய் உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2016 | | | | 2015 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருவாய்க்கான விடயம் | 2016 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | பட்டியல் தொகை | உள்ளவாறான அறவீடு | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | ஆண்டிற்கான பட்டியல் தொகை | உள்ளவாறான அறவீடு | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| தீர்வையும் வரியும் | 10,159,184 | 19,117,983 | 23,079,467 | 6,880,726 | 5,610,272 | 19,512,094 | 15,751,082 | 10,159,184 |
| கடை வாடகை | 4,004,777 | 21,171,502 | 21,517,764 | 3,658,514 | 3,054,217 | 18,196,985 | 17,527,829 | 3,723,373 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 43,542 | 184,682 | 184,682 | 43,542 | 43,543 | 311,655 | 311,655 | 43,543 |
| வியாபார வரி | 46,915 | 578,000 | 578,000 | 46,915 | 46,915 | 676,500 | 675,500 | 46,915 |

### 2.2.2 சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம்

2016 ஆம் ஆண்டிற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை பெற வேண்டிய வியாபார நிறுவனங்கள் களப் பரிசோதனைக்கு உள்ளாகவில்லை. சுற்றாடல் அனுமதிப்பத்திரம் காலாவதியாகியபோதும் மீண்டும் அதனைப் புதுப்பிக்காதிருந்த வியாபார நிறுவனங்களது எண்ணிக்கை 03 ஆகும். அவற்றிலிருந்து ரூபா 12,000 மற்றும் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றிராத 09 வியாபார நிறுவனங்களிலிருந்து ரூபா 36,000 என்பனவற்றை சபை இழந்திருந்தது.

### 2.2.3 கடை வாடகை

புதிய கடைத்தொகுதில் 03 கடைகளது குத்தகைக் காலம் 2015 நவம்பர் 21 ஆந் திகதி முடிவடைந்திருந்தபோதும், மீண்டும் உடன்படிக்கையிலீடுபடாது 2016 செப்டம்பர் 28 வரை தொடர்ந்திருப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அக் குத்தகையாளர்கள் அங்கிருந்து நீங்கிய பின்னரும் 2017 பெப்ரவரி 07 ஆந் திகதியளவிலும் அக் கடைகளைக் கேள்விகளைக் கோருவதன் மூலம் குத்தகைக்கு வழங்காது போனமையால் சபை இழப்பிற்குள்ளான கடை வாடகை வருவாய் ரூபா 150,500 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) 2016 நவம்பர் 19 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரது LGD/13/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம் 03 ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் குத்தகை வாடகை மீளாய்வு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், கடைகளை குத்தகைக்கு வழங்குகையில் சபை அதற்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(ii) வேலை இடமாற்றத்திற்குள்ளான 03 உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் மீதியாக ரூபா 197,089 சேவையிலிருந்து நீங்கிய மற்றும் மரணமடைந்த 23 உத்தியோகத்தர்களிடமிருந்து என்போரிடமிருந்து ரூபா 148,098 கடன் மீதியும் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பயன்படுத்தப்படாத/குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பணப் பெறுமதியோ அல்லது பெறப்பட்ட திகதியோ இனங்காணப்பட்டிராததும் உள்ளூராட்சி ஆணையாளர் மூலம் சபைக்கு கிடைக்கப்பெற்றதுமான பிளாஸ்டிக்கைத் தூளாக்கும் இயந்திரம் (CRUSHER) 2017 மே 09 ஆந் திகதியளவிலும் கழிவுப் பொருள் முகாமைத்துவ பிரிவில் பயன்படுத்தப்படாதிருந்தது.

### 3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

(அ) சபைக்குச் சொந்தமான "கொட்டபொடவத்த " கழிவுப் பொருள் பிரிவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பக்கச் சுவர்கள் ஏறக்குறைய 3 இடங்களில் வெடிப்புக்குள்ளாகியிருந்தன. அதனால் அதற்கருகே சபையால் நிர்மாணிக்கப்பட்டுள்ள சனசமூக நிலையமும் கிராம உத்தியோகத்தரது அலுவலகத்தைச் சேர்ந்த கட்டிடமும் இழப்பிற்குள்ளாகும் சாத்தியம் நிலவியதுடன் அதற்கருகே உள்ள அரச ஊழியர் கிராமக் குடியிருப்போருக்கும் கழிவுப் பொருள் பிரிவிற்கு அருகேயுள்ள அத்துமீறிய

குடியிருப்பாளருக்கும் சுகாதார சீர்கேடுகளும் தொற்றுநோய்களும் ஏற்படும் சாத்தியம் உள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபை நன்கொடையாகப் பெற்ற பொலிதீனைக் கட்டிகளாக அமைக்கும் இயந்திரம் (Bailing Machine) வினைத்திறனுடன் பயன்படுத்தப்படாமையால் கழிவுப்பொருட்களுடன் சேகரிக்கப்படும் பொலிதீனின் அளவைக் குறைக்க முடியாதிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன், போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வு அறிக்கைகளது பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதுமிருந்தன.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமான, செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் நிலவியமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) உள்ளகக் கணக்காய்வு